விஷேட பதிப்பு
26 - 09 - 90

# முரசொலி

விலை
ரூபா 2-00

★ இன்று முற்பகல் சரித்திரப் பெருமை மிக்க நிகழ்வு

# கோட்டையில் புலிக்கொடி

# திலீபன் கனவு நனவானது



முந்நூற்றுஎழுபது வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த யாழ். கோட்டையில் இன்று புலிக்கொடி பட்டொளி வீசிப் பறந்தது, கோட்டையிலே புலிக்கொடி பறந்திட வேண்டுமென்ற இலட்சியத்தாகத்தை, வேகத்தை இதயத்தில் ஏற்றித் தன் இன்னுயிர் ஈந்த தியாகி திலீபனின் இன்பக்கனவு நனவானது. அத் தியாகியின் உயிர் பிரிந்த நேரமான முற்பகல் 10.48 மணிக்கு விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டத் தளபதி திரு. பானு புலிக்கொடியை ஏற்றிவைத்து, உலகெங்கும் ஈழத்தமிழன் புகழ் பரப்பும் சரித்திர நிகழ்ச்சியை நிறைவேற்றி வைத்தார்.



களம் பல கண்ட கோட்டை புலிகள்வசம் வந்த வரலாற்று நிகழ்வு நிகழ்ச்சியை அறிந்த மக்கள் ஆனந்த மிகுதியால் துள்ளிக் குதித்தனர். வயதுபேதமின்றி அனைவரினது முகங்களிலும் நெடுநாட்களுக்குப்பின் மலர்ச்சியையும்,

— மறு பக்கம் பார்க்க

# மண்டைதீவு இராணுவமும்

# வெளியேறுகிறது!

கோட்டையை விடுதலைப் புலிகள கைப்பற்றியதைத் தொடர்ந்து மண்டைதீவில் முகாமிட்டிருந்த இராணுவத்தினரும் அங்கிருந்து வெளியேற ஆரம்பித்துள்ளனர்.

இன்று காலை பல தடவைகள் மண்டைதீவில் வந்திறங்கிய ஹெலிகொப்டர்கள் அங்கிருந்து இராணுவத்தினரை ஏற்றிச் சென்றதை அவதானிக்கமுடிந்தது.

இந்த இராணுவத்தினர் பலாலிக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக பி. பி. ஸியின் சர்வதேச சேவை இன்று நண்பகல் அறிவித்தது.

மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்து நேற்று நள்ளிரவு முதல் யாழ். நகரை நோக்கி கடுமையான ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (66 கி)




## களம் பல கண்ட யாழ் கோட்டை
## புலிகள் வசம்

## யாழ். பேராலயம் பலத்த சேதம்; ஆண்டவர் சுருவம் தப்பிய அற்புதம்

நேற்று இரவு 7.15 மணி முதல் பாஷையூர் கடலில் நின்ற பீரங்கிப் படகில் இருந்தும் மண்டைதீவில் இருந்தும் யாழ் நகரின் கரையோரப் பகுதியை நோக்கி அகோரமாக மேற்கொள்ளப்பட்ட கலிபர், ஷெல் தாக்குதலினால் பெருமளவிலான வீடுகளும். கோவில்களும், பாடசாலைகளும் பெரும் சேதமடைந்தன

யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் வீழ்ந்த ஷெல்லினால் பாடசாலை பெரும் சேதத்திற்குள்ளானது. இங்கு நான்கிற்கு மேற்பட்ட ஷெல்கள் வீழ்ந்து வெடித்துள்ளன. இங்கிருந்த ஒரு சில குடும்பங்கள் மயிரிழையில் உயிர் தப்பினர்,

பத்திரிசியார் தொழிற் கல்வி நிறுவனத்தில் வீழ்ந்த இரண்டு ஷெல்லினால் கல்வி

— மறு பக்கம் பார்க்க

## வெடிகள் கொளுத்தி மக்கள் ஆனந்த ஆரவாரம்

கோட்டை கைப்பற்றப்பட்டதனை கேள்வியுற்ற மக்கள் தம் பூரிப்பை வெளிப்படுத்த வெடிகளைக் கொளுத்தி ஆரவாரித்தனர்.

நகர்ப்பகுதிகள் என்று மாத்திரமன்றி குக்கிராமங்களிலும், மூலை முடுக்குகளிலும் வெடியோசை காதைப் பிளந்தது.

மக்கள் ஆடினர், பாடினர் பரவசத்தின் உச்சத்துக்கே சென்றனர் என்றாலும் மிகையாகாது

இது இவ்வாறு இருக்க யாழ். கோட்டையைத் தமது படைகள் கைப்பற்றி விட்டதாக கடந்த 13-ம் திகதி அரசாங்கம் அறிவித்தது.

—இமது பக்கம் பார்க்க

## இரு போராளிகள் வீரமரணம்

யாழ்.கோட்டையில் இருந்து ஸ்ரீலங்கா இராணுவத்தினரை முற்றாக வெளியேறறும்இறுதி முயற்சியில் நேற்று இரு விடுதலைப் புலி போராளிகள்

— மறு பக்கம் பார்க்க

## உடுப்பிட்டியில் பொம்மர் தாக்கி மாணவி பலி; பலர் படுகாயம்

உடுப்பிட்டியில் இன்று காலை நிகழ்ந்த பொம்மர் தாக்குதலில் மாணவி ஒருவர் மரணமானார், ஐவர் படுகாயமுற்றனர், பல வீடுகள் சேதமடைந்தன.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

— மறு பக்கம் பார்க்க

## புங்குடுதீவில் இரவுக்கொள்ளை பலவீடுகளில் கைவரிசை

புங்குடுதீவின் அனைத்துப் பகுதிகளிலும் கடந்த சில நாட்களாக என்றுமில்லாதவாறு இரவு நேரக் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றனன.

நாட்டில் ஏற்பட்டிருக்கும்

— மறு பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'யாகம் தொடங்கிவிட்டோம்...' வெரித்தாஸில் செல்லப்பா பாடல்

விடுதலைக்கீதங்களில் ''தேனிசை செல்லப்பா'' வின் பாடல்கள், தனிச்சிறப்புப் பெற்றவை. தியாகி திலீப னின் நினைவுதின இந் நாட்களில் செல்லப்பாவின் பாடல்கள் தமிழீழம் எங்கும் இசைக்கப்படுகின்றது.

தேனிசை செல்லப்பாவின் புரட்சிப் பாடல்கள் அண் மைக் காலங்களில் வெரித்தாஸ் வானொலியிலும் ஒலி பரப்பப்பட்டு வருகின்றன.

திங்கள் வெரித்தாஸ் வானொலியின் இர வுச் சேவையில் '' யாகம் தொடங்கிவிட்டோம் ஒரு வேள்வி தொடங்கிவிட்டோம்'' என்ற பாடல் ஒலி பரப்பப்பட்டது. இப்பாடல் ஒரு தமிழக நேயரின் விருப்பத்திற்கிணங்க ஒலிபரப்பப்பட்டது இங்கு குறிப் பிடத்தக்கது. (70கி)

## யாழ். ஆசிரியர் இருவருக்கு தென்பகுதிக்கு திடீர் இடமாற்றம்

யாழ். மாவட்டத்தில் கடமை புரிந்து வரும் சில ஆசி ரியர்கள் தென்பகுதிக்கு திடீர் இடமாற்றம் செய்யப்பட் டுள்ளனர்.

இந்த இடமாற்றங்களை உடன் அமுல்படுத்துமாறு வட- கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் யாழ். கல்விப் பணிப்பாளரைப் பணித்துள்ளார்.

இதன்படி வட இந்து மக ளிர் பாடசாலை, இந்துக் கல் லூரி ஆகியவற்றில் பணிபுரி யும் இரு ஆசிரியர்களே இத் திடீர் இடமாற்றத்திற்கு உள் ளாகியுள்ளனர்.

இவர்கள் இருவரும் முறையே கொழும்பு தெற்கு, களுத்துறை பகுதிகளுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ள னர். (ப - 17 கி)

## முல்லை. அகதிகள் பராமரிப்புக்கு 57 மில்லியன் தர கோரிக்கை

முல்லைத்தீவு அகதிகளைப் பராமரிக்க 57 மில்லியன் ரூபா தேவைப்படுகிறது. இந்த மதிப்பீடு பற்றி முல்லைத்தீவு அரசாங்க அதிபர் கே. பொன்னம்பலம், அத்தியா வசிய சேவைகள் ஆணையா ளர் நாயகமூடாக சம்பந்தப் பட்ட அமைச்சுக்கு தெரிவித் திருப்பதாக தெரியவந்துள் ளது.

மற்றும் முல்லைத்தீவுக் கச் சேரி செலவுகளுக்கென திறை சேரியிலிருந்து 5 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஜனசக்தி உதவி பெறுவோ ருக்கென ஜனசக்தி கட்டுநிதி 6.2 மில்லியன் ரூபாவும் முல் லைத்தீவுச் செயலகத்திற்கு வந்திருப்பதாகவும் தெரிய வந்துள்ளது. (38-கி)

## மானிப்பாயில் பீப்பாய் குண்டு பலர் மயிரிழையில் தப்பினர்

யாழ். நகர் மீது இரவுநேரங் களில் நடாத்தப்படும் கண் மூடித்தனமான குண்டு வீச்சு நேற்று முன்தினமிரவும் தொடர்ந்தது.

நேற்று முன் இரவு அவ்ரோ விமானத்தால் வீசப்பட்ட 'பீப்பர் குண்டுகளில் ஒன்று நள்ளிரவு 12 மணியளவில் மானியளவில் மானிப்பாய், பட்டினசபை ஒழுங்கையில் உள்ள நா. தவரத்தினம் என் பரவது வீட்டின் முற்றத்தில் வீழ்ந்து வெடிக்காத நிலை யில் மீட்கப்பட்டது.

குண்டு வீசப்பட்ட நேரத் தில் அவ்வீட்டிற்குள் 24 பேர் ஆழ்ந்த நித்திரையில் இருந்து தெய்யிாதீனமாக உயிர்தப்பி னார்கள். வீட்டின் முற்றத் தில் ஒரே பெறறோல் நாற்ற மாக இருந்தது.

இதேவேளை, ம்ண்டைதீவி லிருந்து ஏவப்பட்ட ஆட்லறி ஷெல் ஒனறு ஆனைக்கோட் டைப் பகுதியிலுள்ள கரா ஜிற்கு அருகில் விழுந்தது. எனினும் அந்த ஷெல்லும் வெடிக்கவில்லை.(ப-10, ப-11 70கி)

### யாழ். பேரலாயம்...

நிறுவனம் பெரிதும் சேத மடைந்தது. யாழ் பெரிய கோவிலில் வீழ்ந்த மூன்று ஷெல்லினால் கோவில் பெரி தும் சேதமடைந்தது.கல்லறை ஆண்டவர் சுருவம் உள்ள பகுதியில் வீழ்ந்த ஷெல்லி னால் அப்பகுதி பெரிதும் சேத மடைந்தது.

ஆனால் கல்லறை ஆண்ட வர் சுருவம் சேதமடைய வில்லை. அதுவைக்கப்பட் டுள்ள கண்ணாடி தான் உடைந்துள்ளது. (ப25-கி)

### கோட்டை...

பெருமிதத்தையும் அவதா னிக்க முடிந்தது.

தம் ஆனந்த வெளிப் பாட்டை எவ்விதம் வெளிப் படுத்துவது எனத் தெரியாது அவர்கள் பரபரத்தனர். இம் மகிழ்ச்சிச் செய்தியை ஒரு வருக்கொருவர் கூறிப் பெரு மிதமும் கொண்டனர். (ஸ்ரீ கி)

### இரு பாராளிகள்...

வீரமடைந்தனர்.

இதில் ஒருவர் பெண்புலி போராளி என்பதுவும் குறிப் பிடத்தக்கது,

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத் தைத் தெரிவித்துள்ளனர். (ப-11, 68கி)

### வெடிகள்......

முப்படைத் தளபதிகளும் கூட கோட்டைக்குஅ இறங் கியதாகவும் அரசு கூறிக் கொண்டது.

ஆனால் அரசின் இக் கூற்றை விடுதலைப் புலிகள் அப்பட்டமான பொய் என வன்மையாக மறுத்தனர்.

கோட்டை தம்வசம் என்ற அரசின் பிரசாரத்தால் தென் னிலங்கை பெரும்பான்மை மக்கள் வெடி கொழுத்தித் தம் மகிழ்ச்சியை வெளிப்ப டுத்தினர் என்றும் செய்தி வெளியானது இங்கு குறிப்பி டத்தக்கது,

இன்று குடாநாட்டில் கொழுத்தப்பட்ட ஆனந்த வெடிகளால் அல்லோகல்லோ லப்பட்டபோது மக்கள் இதனை நினைத்துக் கொண் டனர். 73 ஸ்ரீ-ஒ

கட்டைபறிச்சான் தாக்குதலின் பின்னணியில்...

## மந்திரி மகளின் காதலன் பலி! ஆளும் கட்சிக்குள் புதிய சர்ச்சை

கடந்த ஜூன்மாதம் 13-ம் 14-ம் திகதிகளில் மூதூர் கட் டைப்பறிச்சானில் தரையி றங்க முற்பட்ட இராணுவ கொமாண்டோக்கள் மீது விடுதலைப்புலிகள் தொடுத்த பெரும் தாக்குதல் தற் பொழுது ஆளும்கட்சி அரசி யல் பிரமுகர்களிடையே பெரும் சர்ச்சையையேற்படுத் தியுள்ளது.

இலங்கை கடற்படையின் எஸ். எல். என் கந்துல என்ற தரையிறங்கு போர்க்கப்பலில் இருந்து 100 கொமாண்டோக் கள் ஆனிமாதம் 14-ம்திகதி கட்டைப்பறிச்சானில் தரை யிறக்கப்பட்டனர்.

இக்கப்பலுக்கு துணையாக இஸ்ரேலிய தயாரிப்பான அதி வேக தாக்குதல் படகுகள் இரண்டும் வேறு சில சிறிய படகுகளும் தாக்குதலை மேற்கொண்டன.

இவை அணைத்தும் கடற் படை அதிகாரி லெப். கொமாண்டர் லக்ஸ்மன் இலங்கக்கோனின் ஆணைக் குட்பட்டிருந்தன.

தரையிறங்கிய கொமாண் டோக்களுக்கு கொமாண்டோ மேஜர் ஏ. எம். அஸாட் தலைமை தாங்கினார்.

புலிகள் மிகச் சாதுர்ய மாகத் தாக்குதலைத் தொடுத்தபோது 60 கொமாண்டோக்கள் கொல் லப்பட்டதாக இராணுவ வட் டாரங்கள் தற்பொழுது ஏற் றுக்கொள்கின்றன.

புலிகளின் தாக்குதலில் மேஜர் அஸாட் கொல்லப்பட் டார். இவர் முன்னாள் அமைச்சர் பாக்கீர் மார்க் காரின் புதல்வியின் காதலன். விரைவில் அவரை திருமணம் செய்யவிருந்தவர்.

இதுதவிர இந்த மோதலில் முன்னாள் அமைச்சர் காமினி திசநாயக்காவின் நம்பிக்கைக் குரிய மெய்க்காவலர்களாக 1987 ஆம் ஆண்டில் கடமை யாற்றிய கொமாண்டோ லெப்ரினன்ட் அனில் விமல சூரியவும், கொமாண்டோ லெம்ரினட் மகிந்த ராஜபக் சவும் கொல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

அரசியல் பின்னணியைக் கொண்ட இராணுவ அதிகாரி கள் இத்தாக்குதலில் கொல் லப்பட்டுள்ளதினால் ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலர் இத் தாக்குதலில் அரசு திட்டமிட் டுச் செயற்படவில்லை என்று கண்டனம் செய்துள்ளனர்.

இதனால் ஆளும்கட்சியினரி டையே புதிய கருத்து வேறு பாடுகளையும், சந்தேகங்களை யும் இச்சம்பவம் தறபொழுது தோற்றுவித்துள்ளதாம். (கி)

## தியாகம் வீரம் - என்றும் வீண்போகாது - ஆஞ்சநேயர்

''தமிழீழ விடுதலைப் புலி களின் தியாகமும், வீரமும் என்றும் வீண்போகாது என்ற பேருண்மையையே கோட் டையை நாம் கைப்பற்றி யுள்ள நிகழ்வு உணர்த்துகி றது'' என்று இன்று பிற் பகல் யாழ். மாவட்ட அரசி யல் பொறுப்பாளரான திரு. ஆஞ்சநேயர் 'முரசொலி'க் குத் தெரிவித்தார்.

''கோட்டையைக் கைப் பற்றி புலிக்கொடி பறக்க விட்டப்பட்டுள்ள இப்பொன் னாளே எமது சுதந்திரப் போராட்டத்தின் புதிய அத் தியாயமாகும்.

கோட்டையைக் கைப்பற்று வதற்கான வீரத் தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்ட வீர வேங்கைகள் வீரமரணம் அடைந்துள்ளதையும் அவர் கட்டிக்காட்டினார்.

70-ப-11-ஸ்ரீ-கி

## முத்திரைச்சந்தியில் இன்று காலை வீடு தரைமட்டம்; சிலர் படுகாயம்

இன்றுகாலை 6.00 மணி யளவில் இடம்பெற்ற விமானக் குண்டுவீச்சின் போது நல்லூர் முத்திரைச் சந்திக்கு அண்மையிலுள்ள எஸ். மங்களேஸ்வரி என்பவ ரது வீடு தரைமட்டமாக்கப் பட்டதுடன் இச்சம்பவத்தின் போது பருத்திற்துறை வீதி யில் சென்று கொண்டிருந்த எஸ். சிவகுருநாதன் (28) வண்ணார்பண்ணை எஸ். சிறிஸகந்தராசா (22) நாச்சி மார்கோவிலடி ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

இதே இடத்திற்கு அண் மையில் உள்ள நல்லூர் வீடியோ சென்ரர ஒழுங்கை யில் உள்ள சு. சிவபாலன் (கணக்காளர் யாழ். செயல கம்) என்பவரது வீட்டில் மண்டைதீல் இருந்து ஏவப் பட்ட ஷெல் ஒன்று விழுந்து வெடித்ததினால் வீட்டின் ஒரு பகுதி மோசமாகப் பாதிப்ப டைந்தது. (66 70 கி)

## நான்கு வீடுகள் எரிந்து நாசம்

நேற்று மாலை பாஷையூர் கடலில் இருந்து மேற்கொள் ளப்பட்ட கவிபர் தாக்குதலி னால் குருநகர் கடற் கரை வீதியில் உள்ள நான்கு வீடு கள் எரிந்து சாம்பலானது.

இங்குள்ளவர்கள் ஏற்க னவே அகதியாக சென்று விட்டபடியால் உயர் சேதம் ஏதுல் ஏற்படவில்லை. (ப-25)

## காரைநகரில் எழுச்சிக் கூட்டம்

தியாகி திலீபனின் மூன்றா வது நினைவுதின மாபெரும் எழுச்சிப் பொதுக் கூட்டம் காரைநகர் யாழ்ற்ரன்கல்லூரி திறந்த வெளியரங்கில் இன்று காலை நடைபெற்றது.

எழுச்சிக் கூட்டத்திற்கு முன்னர் திலீபனின் உருவப் படம் தாங்கிய தேர்ப்பவனி யும் இடம் பெற்றது. (கி)

### புங்குடுதீவில்...

நெருககடி நிலையில் புது முறையிலான கொள்ளையர் கள் திடீர் திடீர் என உருவெ டுத்துள்ளார்கள்.

இந்த திடீர்க்கொள்ளையர் களின் பார்வைக்கு உணவுப் பொருட்களும் துவிச்சக்கர வண்டிகளும்தான் தென்பட் டிருப்பதாக தெரிகிற்து. 20 கி

### உடுப்பிட்டியில்...

உயர் வகுப்பு மாணவி புஷ்பா சிவலிங்கம் (18) என்பவரே இச் சம்பவத்தில் மரணமான வராவர்.

அவரது தாயார், மற்றும் நரன்கு சகோதரிகள், மாமன் ஆகியோர் படுகாயமுற்றனர்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் ஆண்கள் பாடசாலை உடுப்பிட்டிச் சித்திவிநாயகர் ஆலயம் மற்றும் ... வர்த் தக நிலையங்கள் என்பன முற்றாகச் சேதமடைந்தன. 39கி

## கிரகம் தனக்கு சாதகம் என்கிறார் அமைச்சர் ரஞ்சன்

இலங்கை அரசு தற்போது சீனா, பாகிஸ்தான், இங்கி லாந்து, தென்கொரியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலி ருந்து ஆயுதங்களைக் கொள் வனவு செய்வதாக பாது காப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தின பத் திரிகையாளர்களிடம் தெரி வித்துள்ளார்.

1983 முதல் 1987 ஆம் ஆண்டுவரை இலங்கை 95மில் லியன் அமெரிக்க டொலர் களுக்கு ஆயுதக் கொள்வனவு செய்திருந்தது. அதில் 40மில் லியன் அமெரிக்க டொலர்கள் சீனாவிடம் பெற்ற ஆயுதங்க ளுக்காக கொடுக்கப்பட்டது.

இத்தகவல்களை லண்டனி லிருந்து வெளிவரும் 'ரமில் இன்ரனேஷனல்' என்ற ஆங் கில பத்திரிகை தெரிவித்துள் ளது?

தற்போதைய யுத்தம் எப் போது முடிவடையும் என்று பத்திரிகையாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் ப்தில ளித்த ரஞ்சன் விஜயரத்தினா அது கிரக நிலைகளைப் பொறுத்தது எனப்பதிலளித் தார்.

கிரகங்கள் தற்போது யாருக்கு சாதகமாக உள்ளன என்று நிருபர் கேள்வி தொடுத்தபோது கிரகம் தனக்கு சாதமாக இருப்பதாக அவர் தெரிவித்தார். கி

## கொட்டைப்பாக்கு தடைநீக்கம் ஆனால் கற்பூரத்துக்கு தடை

கொட்டைப்பாக்கு எடுத்து செல்ல கடந்த மூன்று மாத காலமாக விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டுள்ளது.

எதுவித தடையுமின்றி கொட்டப் பாக்கு எடுத்துச் செல்ல முடியுமென ஆயுதப் படையினர் வவுனியாவில் கூறினார்கள்.

ஆனால் கற்பூரம் எடுத்து செல்வது தடை செய்யப்பட் டுள்ளது. இத்தடை உத்தரவு திடீரென அமுலுக்கு வந் துள்ளது. பற்றி வகைகளும், டீசல், பெற்றோல்களும் எடுத்து செல்வது தொடர்ந் தும் தடைசெய்யப்பட்டுள் ளது. தீப்பெட்டியும் கொண்டு செல்ல முடியாது என அறி விக்கப்பட்டுள்ளது. 11-கி

## அரசஊழியருக்கு 5 வருட சம்பளம் வீடமைப்புக் கடனாகக் கிடைக்கும்

அரச ஊழியர்களுக்கு வீட மைப்புக்கென புதிய திட்ட மொன்றிற்கு அமைய கடன் கள் வழங்கப்படவுள்ளன.

இப்புதிய திட்டத்தின்கீழ் அரச ஊழியர்களுக்கு அவர் களது ஐந்துவருட சம்பளத் திற்கு சமனான தொகை வீடமைப்புக் கடனாக வழங் கப்படும்.

இக்கடனுக்கு குறைந்தவீத வட்டி அறவிடப்படும். பின் னர் இலகு தவணை முறை யில் கடன் பணம் மீளப் பெறப்படும். (கி)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 26-09-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org